# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**அறிவிக்கை எண். 31/2012** **நாள்: 22.08.2012**

கீழ்க்காணும் பதவிக்கு நேரடி நியமனம் செய்ய 21.09.2012 அன்று வரை இணைய வழி மூலம் மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பதவியின் பெயர் மற்றும் பதவிக் குறியீட்டு எண் | பணியின் பெயர் மற்றும் குறியீட்டு எண் | காலிப் பணியிட/ பகிர்மானங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்ற முறை |
|---|---|---|---|
| கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் **இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்** (2010-2011) & (2011-2012) (பதவிக் குறியீட்டு எண் 1853) | தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி (குறியீட்டு எண் 036) | **5**<br>பொ.பி. -2,<br>பி.வ. -2 (1பெ)<br>ஆ.தி. -1 | ரூ. 9,300 - 34,800/- + 4,200/- தர ஊதியம் (ச.ப. 2) |

**விரிவாக்கம் :-**

பொ.பி.- பொதுப்பிரிவினர், பி.வ. -பிற்பட்ட வகுப்பினர், ஆ.தி- ஆதி திராவிடர், மற்றும் பெ- பெண்கள்.

**குறிப்பு:**

அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள பெண்களுக்கான இட ஒதுக்கீடானது பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை உள்ளடக்கியது.

**2. முக்கிய தேதிகள்:-**

| | | | |
|---|---|---|---|
| அ | அறிவிக்கை நாள் | 22.08.2012 | - |
| ஆ | விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 21.09.2012 | - |
| இ | வங்கி அல்லது அஞ்சலகங்கள் மூலம் கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாள் | 25.09.2012 | - |
| ஈ. | தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 28.10.2012 முற்பகல் | முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணிவரை |

| |
|---|
| (அ) குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதி<br>மற்றும் |
| (ஆ) இந்திய கைத்தறி தொழில்நுட்ப நிறுவனம் சேலம் அல்லது வாரணாசி அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட கைத்தறி தொழில் நுட்பவியலில் பட்டயப் படிப்பு.<br>**அல்லது**<br>தொழில் நுட்ப பட்டயத் தேர்வு வாரியம், சென்னை அல்லது தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தால் வழங்கப்படும் துணிநூல் உற்பத்தி பட்டயப் படிப்பு. |

**<u>விளக்கம்:-</u>**

**குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி என்பது**

**(1) பதினோரு ஆண்டுகால எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் தேர்ச்சி பெற்று தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களின் கீழ் உள்ள கல்லூரிகளில் சேர்வதற்கான தகுதி பெற்றிருத்தல்.**

**அல்லது**

**(2) தற்போது நடைமுறையிலுள்ள பத்து ஆண்டுகால எஸ்.எஸ்.எல்.சி வகுப்பில் தேர்ச்சி.**

**4. <u>பொது விவரங்கள்</u> :-**

அ. நியமன இட ஒதுக்கீட்டு விதி இப்பதவிக்கு பின்பற்றப்படும்.

ஆ. அரசு ஆணை (நிலை) எண்.145, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 30.09.2010ன் படி நேரடி நியமனத்திற்கான அனைத்து காலிப் பணியிடங்களில் 20% (சதவீதத்தை) அப்பணியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை தமிழ்வழியில் படித்தவர்களைக் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் நிரப்ப ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி இடஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும். இருப்பினும் இத்தெரிவில், உபயோகப்படுத்தப்பட்டுள்ள முறைகளில் (turn) **தமிழ் வழியில் படித்தவர்களுக்கான முன்னுரிமை** அடிப்படைக்கான முறை வரவில்லை.

(அருந்ததியர்) விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அப்பணியிடங்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

ஐ. தெரிவுக் குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கையும் (விண்ணப்பதாரர் நிலை விண்ணப்பப் படிவத்தில் கோரிய உரிமை தவிர) தெரிவு முடிவுகள் வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் பெறப்பட வேண்டும். அதற்குப் பிறகு பெறப்படும் தெரிவு குறித்த எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

5. **<u>எழுத்துத் தேர்விற்கான பாடத்திட்டம் (கொள்குறி வகை மற்றும் வாய்மொழித் தேர்வு)</u>:-**

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள் | |
|---|---|---|---|---|
| | | | ஆ.தி, ஆ.தி (அ), ப.கு., மி.பி.வ. / சீ.ம., பி.வ. மற்றும் பி.வ.(மு) | இதர வகுப்பினர் |
| **<u>கீழ்கண்ட பாடத்தில் ஒற்றைத் தேர்வுத் தாள்</u>**<br><br>**துணிநூல் தொழில்நுட்பம் (Textile Technology)**<br>(குறியீட்டு எண். 115)<br>(பட்டயப் படிப்புத் தரம்)<br>(200 வினாக்கள்) | 3 மணி நேரம் | 300 | 102 | 136 |
| வாய்மொழித் தேர்வு மற்றும் ஆவணங்கள் | | 40 | | |
| மொத்தம் | | 340 | | |

**<u>குறிப்பு:</u>**

(i) வினாத் தாள் ஆங்கிலத்தில் மட்டுமே தயார் செய்யப்பட்டிருக்கும்.

(ii) மேற்குறிப்பிட்ட பாடத்திற்கான பாடத்திட்டம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

| பாடம் மற்றும் குறியீட்டு எண் | பக்கம் | தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டு எண் மற்றும் தேதி |
|---|---|---|

